1980 ஆகஸ்ட் 1]

முன்னோடியாக மதுராந்தகத்தில் ஏற்படுத்தப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு மற்ற ஆலைகளுக்கும் அதை விரிவு படுத்தும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஆலைக்கு பக்கத்தில் காகித ஆலையை நிறுவும் திட்டத்தை முன்னோடியாக எடுத்துக்கொண்டு, செயல் படுவதின் திறனைப்பார்த்து, அதன் பலனைப் பார்த்து, பிறகு எங்கெங்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் காகித ஆலைகள் வைக்கும் வகையில் அரசு ஆலோசித்து வருகிறது என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வெளிவரும் கரும்புச் சக்கையிலிருந்து காகித ஆலை ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோல், தஞ்சாவூர் மாவட்டத்தில் வடபாதிமங்கலத்தில் இருக்கிற சர்க்கரை ஆலைகளிலிருந்தும் ஏராளமான கரும்புச் சக்கைகள் கழிவுப் பொருளாக வெளியேறுகின்றன. அங்கே வைக்கோலும் அதிக அளவில் கிடைக்கிறது. ஆகவே அங்கேயும் காகித ஆலைகளை ஏற்படுத்தும் அளவில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் ஏற்கனவே திருப்பித் திருப்பிச் சொல்லிவிட்டேன். மதுராந்தகம் சர்க்கரை ஆலையின் பக்கத்தில் ஏற்படுத்தப்படும் இந்தக் காகித தொழிற்சாலையின் பலனைப் பார்த்து, எங்கெங்கு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் காகிதத்தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான முறையில் அரசு ஆலோசிக்கும் என்று மொத்தமாகவே சொல்லிவிடுகிறேன்.

சலவைத்தொழிலாளர்களுக்கு நியாய விலையில் சலவைப் பொருட்கள் வழங்கல்.

(*வினா எண். 88)— திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சலவைத் தொழிலாளர்களுக்கு, காரம், நீலம், பிளிச்சிங் பவுடர், டினோபால் முதலிய பொருட்கள் சூப்பர் மார்க்கட் மூலம் நியாய விலையில் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1980 ஆகஸ்ட் 1

[முற்பகல் 9-20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அப்படிப்பட்ட ஒரு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: எல்லா சமுதாயங்களுக்கும் அரசாங்கத்திலிருந்து பல உதவிகளைச் செய்கிறோம். ஆனால் இந்தச் சலவைத் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய மக்கள். ஆகவே அவர்களுக்கு சலவைப்பொருள்கள் நியாயவிலையில் கிடைப்பதற்கு பரிசீலனை செய்ய வேண்டும். அமெரிக்காவில் தேர்தலில் குடியரசுக் கட்சிக்கு தேர்தல் சின்னம் கழுதையாகும். ஆனால் இங்கே கழுதையின் மேல் பொதியை வைத்து அவைகளைச் சிரமப்படுத்துகிறார்கள். இந்த சலவைத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதோடு இந்தக் கழுதைகளும் பல விதத் தொல்லைகளுக்கு ஆட்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேர்தல் சின்னக் கழுதைக்கும் நம் கழுதைக்கும் என்ன சம்பந்தம்? சலவைப்பொருட்கள் நியாயவிலையில் கிடைப்பதுபற்றித்தான் கேள்வி.

திரு. இரா. தாமரைக்கனி: இந்தக் கழுதைகள் அடிக்கடி குட்டிச்சுவர்களின் பக்கம்போய் நின்று கொண்டிருக்கின்றன. ஆகவே சலவைத் தொழிலாளர்கள் அவற்றை தேட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எதிர்க்கட்சிக் கூட்டங்களில்கூட கழுதையின் வாலில் கட்டிவிடுகிறார்கள். ஆகவே அந்தக் கழுதைகளைப் பிடித்து நையப்புடைத்துவிடுகிறார்கள். அதனால் கழுதைகள் ரொம்பவும் சிரமப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி என்ன?

திரு. இரா. தாமரைக்கனி: கேள்வி என்னவென்றால், இந்தக் கழுதைகளை அரசாங்கம் வாபஸ் வாங்கிக்கொண்டு கழுதைகள் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் இந்தக் கழுதைகளுக்குப் பதிலாக வேறு வாகனங்களை சலவைத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

பதில்—இல்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட்: கிராமப்புறங்களில் சலவைத் தொழிலாளர்களுக்கு காரம், நீலம், பிளீச்சிங் பவுடர் போன்ற பொருள்கள் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு கிராமங்களில் கடைகள் அமைத்து நியாய விலையில் கொடுக்க இந்த அரசு முன்வருமா?

1980 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; சலவைத் தொழிலாளர்களுக்குத் தேவைப்படுகிற சோடா போன்ற மிக முக்கியமான பொருள்கள் நியாயவிலைக் கடைகளில் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை. ஆனால் அவை அவர்களுக்கு நியாய விலையில் கிடைக்கவேண்டும் என்பதற்காக மாவட்ட பிற்பட்ட நல அலுவலர்கள், அந்தந்த மாவட்ட வினியோக அலுவலர்கள்மற்றும் வட்டாட்சியினர் மூலமாக அடையாளக் கார்ட்ஸ் வழங்கிவருகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தருவிக்கப்படும் சோடா சலவைத் தொழிலாளர்களுக்கு அவர்கள் தொழிலுக்கு எந்தளவிற்கு தேவைப்படுகிறது என்று கண்டறிந்து அந்த அளவு தருவதற்கான முயற்சியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டுறவு சங்க விநியோகஸ்தர்கள் மூலம் நடைமுறைப்படுத்த ஆவன செய்து வருகிறார்கள்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : நியாயவிலையில் கிடைப்பதற்கு கார்ட்கள் கொடுத்தாலும் அந்த நகரங்களுக்கு செல்ல பஸ்ஸுக்கு இரண்டு ரூபாய் ஆகிறது. ஆகவே அந்தந்தக் கிராமங்களிலேயே அந்தந்த அதிகாரிகள் மூலம் நேரடியாக கார்ட்மூலம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நியாயவிலைக் கடைகள் மூலம் எல்லோருக்கும் கிடைக்கிறமாதிரியல்லை. சலவைத் தொழிலாளர்களுக்கு அவர்கள் எவ்வளவு பயன்படுத்து கிறார்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கு கார்ட் வழங்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சோடா எவ்வளவு ஒதுக்குகிறார்களோ அதனுடைய பங்கீட்டு முறையில் கூட்டுறவுச்சங்கம் மூலமாக விநியோகிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

திரு. கே. தனக்கோடித் தேவர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கின்ற இந்த சலுகைகள் கிராமத்திலே வாழ்கின்ற சலவைத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் முறைப்படி பிற்பட்டோர் நல அலுவலகத்திற்கு விண்ணப்பங்கள் போட்டால், அவர்கள் கவனித்து ஆவன செய்வார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்கள் வட்டாட்சி அலுவலகத்திற்குச் சென்று காரம், நீலம் போன்ற பொருள்களை பெற்றுக்கொள்வது கடினமாக இருக்கின்ற காரணத்தினால், இப்போது கிராமங்களிலே கூட்டுறவு கடைகள் இருக்கின்ற காரணத்தினால். அங்கே எளிதாக இந்த சலவைத் தொழிலாளர்கள் அத்தகைய சாமான்களைப் பெற்றுக்கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். இத்தகைய கூட்டுறவு சங்கங்களின் மூலம் அத்தகைய பொருள் களை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நட வடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர் களே, சலவைத் தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசால் வழங் கப்பட்டு வருகின்ற சலுகைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர், அவர்களே தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே சலவைத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சோடா போன்ற முக்கிய பொருள்கள் இப்போது சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷனின் கீழ் இயங்கக்கூடிய அமுதம் ஷாப் போன்றவை கள் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்றன. அவைகளின் மூலமாக நியாய விலையில் இந்தமாதிரியான பொருள்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே. நான் முதலிலேயே குறிப்பிட்டபடி, இந்த கூட்டுறவு சங்கங்களின் மூலமாக அந்தப் பொருள்களை வழங்குவதற்கான ஏற்பாடு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக நடைபெற்று வருகிறது. ஆகவே, கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வழங்கப் படுவது போதாது என்ற நிலை ஏற்பட்டால், நியாய விலைக் கடைகள் மூலமாக ஒழுங்காக, சீராக வழங்கப்படுகின்ற நிலை ஏற்படுமானால், பிறகு அதைப்பற்றி இந்த அரசு யோசிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்கள் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களிடம் கொத்தடிமைகளாக பணி புரிகிறார்கள். வருடத்திற்கு இவ் வளவு தானியம் என்று கொடுக்கிறார்கள். அந்த தானியங்கள் கூட அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேருவதில்லை. எனவே சலவைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக அவர் கள் யார் யார் என்று கண்டுபிடித்து அவர்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் புனர்வாழ்வு அளிப்பதற்கு இந்த அரசு ஏதாவது வழிசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1980 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட விவரம் முழுவதும் குறிப்பிலே இல்லை. ஆனால், அவர்கள் தேவைக்கான அளவுக்கு சோடா போன்ற பொருள்கள் கொடுப்பதற்கான வழிவகைகள் செய்யப்படுகின்றது. இந்தப் பொருள்கள் கூட்டுறவு சங்கங்களின்மூலம் கிடைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். பிற்பட்டோர் நலத் துறை அலுவலகமும் இதிலே கவனம் செலுத்திவருகிறார்கள்.

நாகப்பட்டினத்திலுள்ள பனிக்கட்டி நிலையம்.

*வினா எண். 89.—திரு த. வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நாகப்பட்டினத்தில் உள்ள பனிக்கட்டி நிலையம் செயல்படாமல் இருப்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உண்மையல்ல. நாகப்பட்டினத்திலுள்ள பனிக்கட்டி நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகப்பட்டினத்திலே உள்ள ஐஸ் கட்டி நிலையம் 6 டன், 7 டன் உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால், தற்போது 1 டன், 1 1/2 டன் தான் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் பனிக்கட்டி நிலையம் 1977 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 78 ஜனவரி முடிய 3 மாதங்கள் மட்டுமே அது இயங்காத நிலையில் இருந்தது. அதற்குக் காரணம், புயலால் சேதமடைந்து, பழுது ஏற்பட்டு அந்த 3 மாதத்திற்கு இயங்கவில்லை. அதற்குப் பிறகு அது தொடர்ந்து இயங்கி வருகிறது. அண்மையில் ஏற்பட்ட மின்வெட்டினால் 3 திங்கள் இயங்காமல் இருந்தது. இப்போது இந்த பனிக்கட்டி நிலையம் தொடர்ந்து இயங்கி வருகிறது. அதன் உற்பத்தித் திறன் எவ்வளவு என்ற விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தனியார் ஐஸ் விற்பனை நிலையங்களில் விற்பனை ஆவதைவிட, அரசாங்க ஐஸ் நிலையத்திலே குறைவாக விற்பனை ஆவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?